# சபை—தேவனுடைய குடும்பம்

Transcribed from a message spoken in October, 2012 in Chennai

By *R.S. Milton*

*"ஆகையால் நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத் தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து..." (எபேசியர் 2:19).* நாம் *தேவனுடைய வீட்டார்.*

*"தாமதிப்பேனாகில் தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபை..." (1 தீமோத்தேயு 3:15). சபை தேவனுடைய வீடு.*

இந்த இரண்டு வசனங்களிலும் தேவனுடைய வீடு அல்லது தேவனுடைய குடும்பம் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய வீட்டார் அல்லது தேவனுடைய குடும்பத்தார். சபை என் றால் என்ன? புதிய ஏற்பாட்டின்படி சபை என்பது *தேவனுடைய வீடு* அல்லது *தேவனுடைய குடும்பம்.*

## பிதாவின் இருதய விருப்பம்

தமக்கு ஒரு குடும்பம், பல மகன்களைக்கொண்ட ஒரு குடும்பம், வேண்டும் என்பது நம் பிதாவாகிய தேவனின் மாபெரும் விருப்பம். இந்தப் பல மகன்கள், இந்தக் குடும்பத்தார், அந்தப் பிதாவை வெளியாக்க வேண்டும் அல்லது வெளியரங்கமாக்க வேண்டும் என்பதுதான் நம் பிதாவின் இருதய விருப்பம், அவருடைய நெஞ்சின் வாஞ்சை, ஏக்கம். இந்தப் பூமியில் ஒரு தகப்பன் தன் குடும்பத் தின்மூலமாக அல்லது குடும்பத்தில் உள்ள பிள்ளைகள்மூலமாக தன்னை வெளிப்படுத்த விரும்பு கிறான், வெளியாக்க விரும்புகிறான். இதுதான் அவனுடைய விருப்பம் அல்லது வாஞ்சை. இதைப் புரிந்துகொள்வது மிகவும் எளிது. இந்த முழு வேதாகமத்தை நாம் புரிந்துகொள்வதற்கு, அல்லது இந்த முழுப் பூமியில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு இந்த ஒரேவோர் உண்மை போதுமானது. தம்மை வெளியாக்குவதற்குப் பல மகன்களாலான ஒரு குடும்பம் வேண்டும் என்பதே நம் பிதாவின் இருதய வாஞ்சையும், விருப்பமுமாகும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்தக் குடும்பத்தின் முதல் மகன், நாமெல்லாரும் அவருடைய பல சகோதரர்கள், பிதாவின் பல மகன்கள். முதல் மகனாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்ன சாயல் உடையவராயிருக்கிறாரோ, அவருடைய சாயலுக்கு எல்லா மகன்களையும் ஒப்பாக்கு கிற வேலையைத்தான் அவர் இன்று செய்துகொண்டிருக்கிறார். இதற்காகத்தான் அவர் நமக்கு ஒரு நீண்ட மனித வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறார். இந்த நீண்ட மனித வாழ்க்கை எதற்காக? பல மகன்களாகிய நம்மை முதல் மகனாகிய இயேசுவைப்போல் மாற்றுவதற்காக. இயேசுவைப்போல் மாற்றுவதென்றால் என்ன பொருள்? நூற்றுக்கு நூறு சதவிகிதம் ஆண்டவராகிய இயேசு பிதா வாகிய தேவனை வெளியாக்கினார். ஆண்டவராகிய இயேசு பிதாவை முற்றுமுடிய எப்படி வெளி யாக்கினாரோ அப்படியே நாமும் அவரை வெளியாக்க வேண்டும்.

தேவனிடத்தில் பல குணாம்சங்கள் உள்ளன; பிரதானமாக தேவன் அன்பாக இருக்கிறார், ஒளியாக இருக்கிறார், நீதியாக இருக்கிறார், பரிசுத்தமாக இருக்கிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவ னுடைய எல்லாக் குணாம்சங்களையும் ஒரு பிசகுகூட இல்லாமல் அப்படியே வெளியாக்கினார். ஆண்டவராகிய இயேசு தேவனை எப்படி வெளியாக்கினாரோ, அப்படியே நாமும் தேவனை வெளி யாக்க வேண்டும் என்பதே அவருடைய விருப்பம். அவருடைய அன்பை, அவருடைய நீதியை, அவருடைய பரிசுத்தத்தை, அவருடைய ஒளியை நாம் வெளியாக்க வேண்டும் என்பதே அவருடைய விருப்பம்.

## ஒத்தசாயலாக்கப்படுதல் ஒரு வழிமுறை

ஒத்தசாயலாக்கப்படுதல் ஒரு வழிமுறை. இது ஒரே நாளில் மந்திரத்தினால் நடந்துவிடாது. ஒரு மாங்கொட்டையை நிலத்தில் போட்டால் அது ஒரே நாளில் பெரிய மரமாக மாறிவிடாது; நாமும் அதிலிருந்து மாம்பழங்களை பறித்துச் சாப்பிட முடியாது. மாங்கொட்டை ஒரு வழிமுறையினூடாய்ப் போய் பல ஆண்டுகள் கழித்து ஒரு பெரிய மரமாக மாறுகிறது. அதன்பின் அதிலிருந்து நாம் மாம் பழங்களைப் பறித்துச் சாப்பிடுகிறோம். இது ஒரு வழிமுறை. இது ஒரே நாளில் நடப்பதில்லை. அதுபோல, நாம் தேவனை வெளியாக்குவது அல்லது இயேசுவைப்போல் மாறுவது என்பது ஒரே நாளில் நடந்துமுடிந்துவிடுவதில்லை. இது ஒரு வழிமுறை.

தேவன் உண்மையிலே இதில் பொறுமையாக இருக்கிறார். ஆனால், மனிதர்கள் இதில் பொறுமை யாக இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, இப்போது என்னிலிருந்து இயேசுவின் சாயல் வெளியாக வில்லை என்று வைத்துக்கொள்வோமே. உடனே சுற்றியிருக்கிற எல்லாரும் நியாயத்தீர்ப்பிலே உட் கார்ந்துவிடுவார்கள். அதுவும் பேசுகிறவர்களுக்கு இன்னும் அதிகமான நியாயத்தீர்ப்பு. "எப்படிப் பேசு கிறார் பாருங்கள், வாய்கிழியப் பேசுகிறார். தேவனைப்போல் மாறுவது, இயேசுவின் சாயலை வெளியாக்குவது என்றெல்லாம் பேசுகிறார். இதுதான் இயேசுவின் சாயலைப்போல் மாறுவதா?" என்று பேச ஆரம்பித்துவிடுவார்கள். மற்ற மனிதர்கள் நம்மேல் பொறுமையாக இருக்கமாட்டார்கள். நாமும் நம்மேல் பொறுமையாக இருக்கமாட்டோம். ஆனால், தேவன் இதில் மிகவும் பொறுமையாக இருக்கிறார்.

ஒரு பிள்ளை வளர்வதற்குப் பெற்றோர் மிகவும் பொறுமையாக இருக்கிறார்கள். சீக்கிரமாக வளர்ந்து விட வேண்டும் என்று பிள்ளை அவசரப்படக்கூடும். உடனே நடக்க வேண்டும், உடனே ஓட வேண் டும், உடனே குதிக்க வேண்டும், உடனே சைக்கிள் ஓட்ட வேண்டும், உடனே மோட்டார் சைக்கிள் ஓட்ட வேண்டும், உடனே கார் ஓட்ட வேண்டும், உடனே ஆகாயவிமானம் ஓட்ட வேண்டும். எல்லாம் உடனே உடனே என்று பிள்ளை அவசரப்படும். ஆனால், பிள்ளையின் பெற்றோர் மிகவும் பொறுமை யாக இருக்கிறார்கள். பெற்றோர் அதற்குரிய வாய்ப்புகளைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக் கிறார்கள். ஆனால், அந்தப் பிள்ளைகள் பல தவறுகளைச் செய்கின்றனர். பெற்றோர் பொறுமை யாக இருக்க வேண்டும். அதுபோல நம் பிதாவாகிய தேவன் மிகவும் பொறுமையாக இருக்கிறார்.

### பரிசுத்த ஆவியானவரின் வேலை

நமக்குள் நம்முடைய பழைய மனிதன் இருக்கிறான் என்று நம் பிதாவுக்குத் தெரியும். இந்தப் பழைய மனிதன் பாவம் என்கிற விதிக்கு உட்பட்டவன். இந்தப் பழைய மனிதன் பாவத்தைச் செய் கிற சாய்மானம் உடையவன். ஏதுவான ஒரு சூழ்நிலை கிடைத்தால் போதும். இந்தப் பழைய மனி தன் பாவம் செய்வதற்குச் சாய்வான் என்று நம் பிதாவாகிய தேவனுக்குத் தெரியும். ஆனால், நம் பிதாவானவர் மிகவும் பொறுமையாக இருக்கிறார். பாவம் செய்கிற நம் பழைய மனிதன், நம் பல வீனங்கள், நம் தோல்விகன், நம் வீழ்ச்சிகள் ஆகிய எல்லாவற்றையும் அறிந்தும் அவர் மிகவும் பொறுமையாக இருக்கிறார். இதை நாம் நம் மனதில் பதியவைத்துக் கொள்ளவேண்டும். பிதா வானவர் மிகவும் பொறுமையாக இருக்கிறார். இன்று நாம் பாவம் செய்யும்போதும் பிதாவனாவர் பொறுமையாக இருக்கிறாரா? ஆம், நாம் பாவம் செய்யும்போதும் பிதாவானவர் பொறுமையாகத் தான் இருக்கிறார். அதே பாவத்தை மீண்டும் மீண்டும் செய்யும்போதும் அவர் பொறுமையாக இருக் கிறாரா? ஆம், அவர் பொறுமையாகத்தான் இருக்கிறார். இது நம்புவதற்குக் கொஞ்சம் கடினமாக இருக்கக்கூடும். அது மட்டும் அல்ல. "அப்படியானால் நான் மீண்டும் மீண்டும் பாவம் செய்து கொண்டேயிருக்கலாமா? அது எனக்கு உரிமம் கொடுப்பதுபோல் இருக்கிறதே! இது நன்றாக இருக் கிறதே. நான் பாவம் செய்து கொண்டேயிருக்கலாமா?" என்று ஒருவேளை கேட்கத் தோன்றும். அப்படியல்ல.

நம்மை அவரைப்போல் மாற்றுவதற்காக அல்லது நாம் தேவனை வெளியாக்குவதற்காகவே நம் முடைய ஆண்டவராகிய இயேசு நம்மை இரட்சித்திருக்கிறார்; இதற்காகவே அவர் மரித்தார்; இதற் காகவே அவர் உயிர்த்தெழுந்தார்; இதற்காகவே அவர் பரமேறினார்; இதற்காகவே அவர் மகிமை யிலே மனிதனாக வீற்றிருக்கிறார். அது மட்டும் அல்ல. இதற்காகவே அவர் நமக்குள் ஜீவனாகவும், பரிசுத்த ஆவியாகவும் இருக்கிறார். நமக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் பல் வேறு அம்சங்களை நமக்குக் காண்பிக்கிறார் அல்லது வெளிப்படுத்துகிறார். கிறிஸ்து எவ்வளவு அழகானவர் அல்லது எவ்வளவு வசீகரமானவர் என்பதை நமக்குக் காண்பிப்பதற்கும், இந்தக் கிறிஸ் துவைப் படிப்படியாகவும், கொஞ்சம் கொஞ்சமாகவும், நமக்குள் உருவாக்குவதற்காகவுமே பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கிறார். இதுகூட மிகவும் மெதுவாக நடக்கிற ஒரு வழிமுறையே.

கோரைகளை வைத்து பாய்கள் நெய்வதைப் பார்த்தால் அது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக் கும். பாரம்பரியமாக நெய்கிற கோரைப்பாயை எப்படி நெய்வார்கள் என்றால் நூல் நூலாக, கோரை கோரையாகச் சேர்த்துப் பின்னுவார்கள். அதுபோல ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவுக்குரிய ஓர் இழை யைப் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் பின்னுவார். ஓர் இழையை நெய்வதற்கேகூட அவர் பல வருடங்கள் எடுத்துக்கொள்ளக்கூடும். ஆனாலும், அதற்காக தேவனுக்கு நன்றி. சாதாரணமான ஒரு பொருளை உருவாக்கவே ஒருநாள் ஆகும் என்றால் கிறிஸ்து நமக்குள் உருவாவதற்கு நிச்சயமாக நாளாகும். இது ஒரு பக்கம்தான். ஆனால், இன்னொரு பக்கமும் இருக்கிறது. அது என்னவென்றால்

அவர் ஓர் இழையையாவது நமக்குள் நெய்கிறார். ஒரு நூலையாவது நமக்குள் நெய்வார். கிறிஸ்துவுக்குரிய ஏதோவொன்றை அவர் நமக்குள் நெய்வார்.

**குகை வாழ்க்கை அல்ல, கூட்டு வாழ்க்கை**

ஆனால், இன்னொரு முக்கியமான கேள்வி இருக்கிறது. பல சமயங்களில் நாம் சேர்ந்து வாழ்வதுதான் நம் பிரச்சினைகளுக்கு காரணம். ஒரு குடும்பத்தில் வாழ்வது அல்லது கணவன் மனைவியாக வாழ்வது அல்லது பெற்றோர் பிள்ளைகளாக வாழ்வது அல்லது வேலைபார்க்கும் இடத்தில் வாழ்வது அல்லது ஒரு வகுப்பில் வாழ்வது-இப்படிக் கூட்டாக வாழ்வது. நாம் ஒரு குகையில் தனியாக வாழ்ந்துவிட்டால் நம் பிரச்சினையெல்லாம் தீர்ந்துவிடும் என்றும், பிரச்சினை இருக்கவே இருக்காது என்றும் நாம் நினைக்கக்கூடும். எங்கேயோ ஒரு காட்டில், ஒரு மூலையில் வாழ்ந்துவிட்டால் இந்தப் பிரச்சினையெல்லாம் இருக்காது என்று எண்ணத் தோன்றலாம்.

சண்டைபோடாத கணவன் மனைவியை நான் இதுவரை பார்த்ததேயில்லை. நீங்கள் அப்படிப்பட்டவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டதோ அல்லது அப்படிப்பட்டவர்களைப் பார்த்ததோ உண்டானால் தயவுசெய்து அதை என் கவனத்துக்கு கொண்டுவாருங்கள். நான் அவர்களிடம் நேர்காணல் காண விரும்புகிறேன்.

உடன்பாடின்மை அல்லது தவறாகப் புரிந்துகொள்ளுதல் போன்றவைகள் இல்லாத ஒரு கூட்டு வாழ்க்கை இந்தப் பூமியில் இல்லவே இல்லை. இரண்டு அல்லது மூன்றுபேர் கூடிவாழ ஆரம்பித்தால் போதும். அங்கு உடன்பாடின்மை வரும். தவறாகப் புரிந்துகொள்ளுதல் வரும். நிறைய சிக்கல்கள், பிரச்சினைகள், கஷ்டங்கள், நஷ்டங்கள், வேதனைகள், மனமுறிவுகள், இருதய உடைசல்கள் போன்ற இன்னும் பல வரும். அப்படியானால் தேவன் நம் ஒவ்வொருவரையும் ஒரு குகையில் தனியாக வாழ வைத்திருக்கலாமே! அப்படியில்லை. பலர் கூடிவாழும்போதுதான் அன்பு என்றால் என்னவென்று தெரியவரும், வெளியாக்கப்படும்.

திரையரங்கில் படத்தைக் காண்பிக்க ஒரு திரை இருக்கிறது. அங்கு திரையே இல்லையென்றால், அவர்கள் காண்பிக்கிற படத்தை நாம் பார்க்க முடியுமா? முடியாது. அது வெறுமனே ஆகாய வெளியில் போய்க்கொண்டிருக்கும். ஒரு வெள்ளைத் திரையை வைத்தவுடன் அந்தப் படத்தின் அழகை நாம் பார்க்கமுடிகிறது. அதுபோல தேவனுடைய அன்பு, தேவனுடைய நீதி, தேவனுடைய பரிசுத்தம், தேவனுடைய ஒளி ஆகியவைகளையெல்லாம் காண்பிக்க என்ன வேண்டும்? மனிதர்களாகிய திரை வேண்டும். மக்கள் கூடிவாழும்போதுதான் தேவனுடைய அன்பு, ஒளி, நீதி, பரிசுத்தம் ஆகியவைகளைக் காண்பிக்க ஒருவருக்கொருவர் திரையாக இருப்பார்கள். இவருக்கு இவர் திரையாக இருப்பார் அல்லது அவருக்கு இவர் திரையாக இருப்பார் அல்லது இவருக்கும், அவருக்கும் இன்னொருவர் திரையாக இருப்பார். அதுபோல தேவன் நம்மை இயேசுவைப்போல் மாற்றுவது, நாம் தனியாக ஒரு குகையில் அல்லது குடிசையில் வாழ்ந்துகொண்டு, “நான் இப்போது இயேசுவைப் போல் மாறிக்கொண்டிருக்கிறேன்,” என்று நம்மை நாமே பாராட்டிக்கொள்வதற்காக அல்ல. “ஆஹா! நேற்றைவிட இன்றைக்கு நான் கொஞ்சம் அதிகமாக இயேசுவைப்போல் மாறிவிட்டேன்,” என்று பாராட்டிக்கொள்வதற்காக அல்ல. குடிசையிலோ அல்லது குகையிலோ நாம் தனியாக வாழ்ந்தால் நாம் ஒருநாளும் இயேசுவைப்போல் மாறவேமாட்டோம். இயேசுவைப்போல் மாறுவதாக நாம் நம்மை ஏமாற்றிக்கொள்ளலாம்.

வீட்டில் இருக்கிற எல்லாரும் உல்லாசப் பயணம் சென்றுவிட்டார்கள் என்றும், நான் மட்டும் வீட்டில் இருக்கிறேன் என்றும் வைத்துக்கொள்வோம். நான் மிகவும் சமாதானமாக இருப்பதாக எண்ணக்கூடும். ஆனால், அது சமாதானமே இல்லை. எல்லாரும் இருக்கும்போது நான் சமாதானமாக இருந்தால் அதுதான் சமாதானம்.

**இரட்சிப்பின் அம்சங்கள்**

தேவனை வெளியாக்க வேண்டுமானால் அவருக்கு ஒரு குடும்பம் வேண்டும். ஒரு குடும்பம் இல்லாவிட்டால் தேவனை வெளியாக்கவே முடியாது. ஆகையால், முழு புதிய ஏற்பாட்டில் அல்லது தேவனுடைய இரட்சிப்பில் இந்த இரண்டு காரியங்கள் முக்கியமானவை. ஒன்று நாம் இயேசுவைப்போல் மாறுவது. இன்னொன்று நாம் தேவனுடைய குடும்பமாக இருப்பது. இந்த இரண்டும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. இயேசுவைப்போல் மாறும்போது மட்டும்தான் நாம் தேவனுடைய குடும்பமாகவும் மாறுவோம். தேவனுடைய குடும்பத்தில் வாழும்போது மட்டும்தான் நாம் இயேசுவைப்போல் மாறவும் முடியும். ஒன்று இன்னொன்றைச் சார்ந்திருக்கிறது. நான் தனிப்பட்ட வாழ்க்கையில் இயேசுவைப்போல் மாறவில்லை என்றால் நான் தேவனுடைய குடும்பத்தில் வாழ

மாட்டேன், வாழ முடியாது. நான் தேவனுடைய குடும்பத்தில் வாழவில்லையென்றால் நான் இயேசுவைப்போல் மாறமுடியாது.

**சபை என்றால் என்ன?**

சபை என்றால் என்ன? நாம் தேவனுடைய குடும்பமாக வாழ்வதுதான் சபை. மனிதர்கள் குடும்பம் குடும்பமாக வாழ்கிறார்கள், இல்லையா? மிகச் சிறிய அலகு குடும்பம்; நகரம்கூட இல்லை, குடும்பம். சொல்லப்போனால் இந்தக் குடும்பம்கூட தேவனுடைய குடும்பத்துக்கு ஒரு நிழல்தான். தேவனுடைய குடும்பம்தான் உண்மையான குடும்பம். மனிதர்கள் வாழ்கிற குடும்ப வாழ்க்கை ஒரு நிழல். ஆனால், அதுவே எவ்வளவு இனிமையாக இருக்கிறது. இல்லையா? நமக்குள் சண்டை சச்சரவுகள் இருக்கக்கூடும். ஆனாலும், நம் வீட்டில் யாராவது இரண்டு அல்லது மூன்று நாட்கள் உல்லாசப் பயணம் சென்றுவிட்டால் அப்போதுதான் அவரை நாம் மிகவும் பாராட்டுவோம். “அவன் அல்லது அவள் இல்லாமல் வீடே வெறிச்சோடிப்போய்விட்டது! அவன் அல்லது அவள் இருந்திருந்தால் வீடு கலகலப்பாக இருந்திருக்கும்!” என்பார்கள். அந்த ஆள் இருக்கும்போது அவனுடைய விலையேறப்பெற்ற தன்மை தெரியாது. அந்த ஆள் இல்லையென்றால் அவனுடைய அருமையைப் பாராட்டுவார்கள். தூரமாக இருந்தால் அருமையாக இருக்கும். பக்கத்தில் வந்தால் அருமை தெரியாது. உண்மை என்னவென்று கேட்டால் நம் குடும்ப வாழ்க்கை இனிமையானது. தாய் தகப்பன், பிள்ளைகள் அல்லது கணவன் மனைவி, அண்ணன் அக்கா தம்பி தங்கை ஆகியவர்கள் இருக்கும் இந்தக் குடும்ப வாழ்க்கை என்பது 24 மணிநேர குடும்ப வாழ்க்கை. வாரத்தில் 7 நாட்கள், வருடத்தில் 365 நாட்கள். நாம் சாகும்வரை குடும்பத்தில்தான் இருக்கிறோம்.

**குடும்ப வாழ்க்கை**

ஒருவேளை ஒரு சகோதரி திருமணமானபிறகு தன் பெற்றோருடன் வாழாமல் தன் கணவனுடன் சேர்ந்து வாழக்கூடும். அந்தச் சகோதரியின் இருதயத்தில் அவளுடைய குடும்பத்தாருக்கு இடம் இல்லை என்பதா இதன் பொருள்? இல்லை. அதுபோல ஒரு சகோதரன் திருமணமானபின்பு, சரீரப்பிரகாரமாக தன் பெற்றோருடன் அல்லது தன் சகோதர சகோதரிகளுடன் சேர்ந்து வாழாமல் இருக்கக்கூடும். ஆனால், அவனுடைய பெற்றோர்களை அல்லது உடன் பிறந்தவர்களை அவன் தன் இருதயத்தில் வைத்திருக்கிறான். இது ஓர் இனிமையான குடும்ப வாழ்க்கையா இல்லையா என்று தீர்மானிப்பது எது? இதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

குடும்ப வாழ்க்கை என்றால் ஒரு நாளில் நாமெல்லாரும் ஒன்றாகக்கூடி அரைமணி நேரம் சேர்ந்து சாப்பிடுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். இதுதான் குடும்ப வாழ்க்கை என்று யாராவது சொல்வார்களா? இல்லை. 24 மணி நேரமும், 365 நாட்களும் குடும்ப வாழ்க்கை நடைபெறுகிறது. அதுபோல, இரண்டு மணி நேரக் கூட்டத்துக்குப் பெயர் குடும்ப வாழ்க்கை இல்லை. நாம் தேவனுடைய குடும்பத்தில் பிள்ளைகளாக இருப்பதென்றால் (நாம் பிள்ளைகளாக இருக்கிறோம்) 24 மணி நேரமும், 365 நாட்களும் நாம் தேவனுடைய குடும்பத்தில் குடும்ப வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, குடும்ப வாழ்க்கை என்பது கூட்டம் அல்ல; அரை மணி நேரமோ அல்லது 2 மணி நேரமோ நாம் கூடிவருவதல்ல. ஆனால், ஒரு குடும்பமாக வாழும்போது அவர்கள் எப்படித்தான் சாப்பிடுவார்கள்? கூடிவந்துதான் சாப்பிடுவார்கள். அரைமணி நேரமே கூடிவந்து சாப்பிட்டாலும், அதிலும் குடும்ப வாழ்க்கை இருக்கிறது. ஆனால், அரை மணிநேரம் கூடிவருவதுதான் குடும்ப வாழ்க்கை இல்லை. வீட்டில் என்னென்ன காரியங்கள் நடைபெறுகின்றன? காலையில் எழுந்ததும் ஒருவர் தேநீர் தயாரிக்கிறார்; ஒருவர் தண்ணீர் எடுக்கப்போகிறார்; ஒருவர் துணியை ஊற வைக்கிறார்; ஒருவர் துணியைக் காயப்போடுகிறார்; ஒருவர் துணியைச் சேகரித்து மடித்து வைக்கிறார்; ஒருவர் வீட்டைப் பெருக்குகிறார்; ஒருவர் சமைக்கிறார்; எல்லாரும் சாப்பிடுகிறார்கள்; சிலர் பாத்திரங்களைக் கழுவுகிறார்கள்;. சிலர் பாத்திரங்களை அடுக்கிவைக்கிறார்கள்; சிலர் சமையலறையைச் சுத்தம்பண்ணுகிறார்கள்; ஒருவர் இரவில் சைக்கிளை உள்ளே எடுத்து வைக்கிறார்; ஒருவர் கொசு அடிக்கிறார்; ஒருவர் கடைக்குப் போகிறார். இவைகளெல்லாம் நம் குடும்ப வாழ்க்கையில் இருக்கின்றனவா இல்லையா? இவைகளெல்லாம் சேர்ந்ததுதான் குடும்ப வாழ்க்கை. ஒருவர் வெங்காயம் வெட்ட வேண்டும். ஒருவர் தக்காளி வெட்ட வேண்டும். இவைகளெல்லாம் குடும்ப வாழ்க்கை. இவைகளையெல்லாம் செய்வதில்தான் இனிமை இருக்கிறது.

**குடும்பத்தில் பிரச்சினை**

இவைகளையெல்லாம் செய்வதால்தான் பிரச்சினையும் வருகிறது. 3 பேர் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். “நான்தான் எப்போதும் தண்ணீர் எடுக்க வேண்டுமா?” இப்படி ஒரு கேள்வி

வருமா வராதா? அற்ப காரியங்களில்கூட நமக்குப் பிரச்சினை வரும். நாமும் பிரச்சினையை உருவாக்குகிறோம், மற்றவர்களும் பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள்.

இந்த முழு உலகத்திலும் இன்றைக்கு நிர்வாகத்தின் பெரிய பிரச்சினை என்னவென்று தெரியமா? ஒரு பெரிய கம்பெனியில் தொழிலாளிகளையெல்லாம் எப்படிக் கூடிவாழவைப்பது என்பதுதான் பெரிய பிரச்சினை. அவர்கள் கூடிவாழ்ந்தால்தான் அந்தக் கம்பெனியின் உற்பத்தித்திறன் அதிகரிக்கும். இதை யாராவது ஒரு நிர்வாகக் குரு செய்துவிடுவாரென்றால் அவருக்குக் கோடிக்கணக்கான பணம் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். 3 பேர் இருக்கும் ஒரு குழுவை இசைவாக வாழவைக்க முடியாது. 3 பேர் எதற்கு? 2 பேரே போதும். 2 பேர் ஒரு குழுவில் இருந்தாலே பிரச்சினை வந்துவிடும். 3 பேர் இருந்தால் இன்னும் பிரச்சினை அதிகமாக வரும். “இவர் என்னிடம்தான் அதிக நெருக்கமாக இருக்க வேண்டும். அவருடன் நெருக்கமாக இருக்கக் கூடாது,” என்பது நம் இரத்தத்திலே ஓடுகிறது. 4 பேர் இருந்துவிட்டால் “2 பேர் என்னுடன்தான் அதிக நெருக்கமாக இருக்க வேண்டும். அவருடன் அவ்வளவு நெருக்கமாக இருக்கக்கூடாது. என்னைத்தான் அதிகமாகப் பாராட்ட வேண்டும். என்னைத்தான் அதிகமாகப் புகழ வேண்டும். நான் கொடுக்கும் புத்திமதிகளைத்தான் அவர்கள் அதிகமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னைத்தான் அதிக புத்திசாலி என்று அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்,” என்று நம் மனம் நினைக்கும். ஆகையால், நாம் ஒருவரோடொருவர் கொள்ளுகிற உறவு மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

மனிதர்களிடையே இனிமையான உறவை வளர்ப்பது, உருவாக்குவது, பேணுவது அல்லது கட்டியெழுப்புவது எப்படி? கட்டியெழுப்புவது என்று கூறும்போது தேவனுடைய பிள்ளைகள் தங்களுக்கிடையே உள்ள உறவை எப்படி வளர்ப்பது என்பதையே குறிப்பிடுகிறேன்.

**உறவின் பல நிலைகள்**

தேவனுடைய பிள்ளைகள் எல்லாருக்கிடையிலும் உறவு இருக்கிறதா? உறவு இருக்கிறது. ஒரே தகப்பனுக்குப் பிறந்த பிள்ளைகள் ஒன்றுமே செய்யாவிட்டாலும்கூட அவர்களிடையே ஓர் உறவு இருக்கிறது. ஆனால், அந்த உறவு வளர்கிறதா என்பதுதான் கேள்விக்குறி? அந்த உறவை நாம் உடைக்கவும் செய்யலாம் அல்லது கட்டியெழுப்பவும் செய்யலாம். சபை வாழ்க்கை அல்லது குடும்ப வாழ்க்கை என்றால் இதுதான் பொருள். நாம் தேவனுடைய பிள்ளைகளோடு கொண்டுள்ள உறவை வளர்ப்பதுதான் சபை வாழ்க்கை.

இந்த உறவில் பல தளங்கள் இருக்கக்கூடும். ஒரு தளம் என்னவென்றால், நாம் “கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்று ஒருவருக்கு வாழ்த்துச் சொல்லும்போது அவர் சும்மா இருந்தால் இது தாழ்வான உறவு. “கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்று நாம் சொல்லும்போது அவரும் “கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்று கூறினால் இது முதல் தளம். இப்பேர்ப்பட்ட வாழ்த்துதலை அவரும் மறந்துவிடுவார். நானும் மறந்துவிடுவேன். ஒருவரையொருவர் பார்க்கும்போது சொல்லவேண்டும் என்பதற்காக “கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” “கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்று கூறிக்கொள்வோம். பழைய காலத்தில் நாம் கோயிலுக்குச் சென்றபோது மற்றவர்களுடன் நாம் ஒருவகையான உறவு கொண்டிருந்தோம் அல்லவா? அப்பேர்ப்பட்ட உறவுதான் இது. மற்றவர்களைப் பார்த்ததும், “சுகமாயிருக்கிறீர்களா? நான் சுகமாயிருக்கிறேன், நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்?” என்று கேட்பது வழக்கம். இது முதல் தள உறவு. இது மோசம் இல்லை. இந்த உறவுகூட இல்லாமல் போவதைவிட “நல்லாயிருக்கிறீர்களா? நல்லாயிருக்கிறேன்,” என்பது பரவாயில்லை. ஆனால், தேவன் விரும்புகிற உறவு இதுவல்ல. கர்த்தருடைய பிள்ளைகளுக்கிடையேயுள்ள உறவு பலமாகவும், வளமாகவும், ஐசுவரியமாகவும் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள உறவைப் பார்ப்போம் அல்லது பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையேயுள்ள உறவைப் பார்ப்போம். அந்த உறவுகளோடு ஒப்பிடும்போது தேவனுடைய குடும்பத்தில் நம் உறவு பலம் குறைந்த அல்லது வளம் குறைந்த உறவாக இருக்கிறது. இந்த உறவுகளை முதலாவது நாம் எப்படி உருவாக்குவது? வளர்ப்பது? பேணுவது? ஒருவன் புதிதாக ஒரு நிறுவனத்துக்கு வேலைக்குச் செல்கிறான் அல்லது வகுப்புக்குச் செல்கிறான் என்று வைத்துக்கொள்வோம். முதலில் நட்பு உருவாகும். கொஞ்ச நாட்களுக்கு அந்த நட்பு மிகவும் இனிமையாக இருக்கும். ஒரு வருடத்திற்கு அல்லது இரண்டு வருடத்திற்கு ஓர் உறவை உருவாக்குவது ஓரளவுக்கு எளிது. 1 அல்லது 2 அல்லது 3 வருடங்களுக்கு அந்த உறவு வளரக்கூடச் செய்யும் அல்லது 5 வருடம் 7 வருடம் பள்ளிகளில் நாம் இதைப் பார்த்திருக்கிறோம். அதன்பின் அது சலித்துப்போகும். அந்த உறவை வாழ்நாள் முழுவதும் பேணி வளர்ப்பது என்பது கடினம். நாம் ஒருவரையொருவர் சரீரப்பிரகாரமாக சந்திக்கும்வரைதான் உறவு இருக்கும். சரீரப்பிரகாரமாக சந்திப்

பது நின்றுவிட்டால் உறவும் நின்றுவிடும். அந்த உறவைப் பேணுவது மிகவும் கடினம். ஆனால், தேவனுடைய பிள்ளைகளுக்கிடையிலான உறவை உருவாக்குவது, பேணுவது, வளர்ப்பது, ஆகியவைகளெல்லாமே மிகவும் முக்கியம். பேணுவதுகூட நடைபெற வேண்டும். இதை எப்படிச் செய்வது?

"இப்போது நான் ஒரு யுக்தியைக் கண்டுபிடித்துவிட்டேன். உறவுகளை உருவாக்குவது, வளர்ப்பது, பேணுவது எப்படி என்ற யுக்தியை நான் கண்டுபிடித்துவிட்டேன்," என்று நான் சொல்ல வரவில்லை. "நான் ஒரு பெரிய நிர்வாகக் குருவாகிவிட்டேன். வேதாகமத்தை வைத்து நான் ஒரு பெரிய நிர்வாக முறையைக் கண்டுபிடித்துவிட்டேன்," என்று சொல்ல வரவில்லை. நாம் எல்லாருமே இதில் கற்றுக்குட்டிகள். ஓர் உறவை உருவாக்குவது எப்படி என்று நமக்குத் தெரியாது. தேவனுடைய பிள்ளைகளோடு ஓர் உறவை எப்படி வளர்ப்பது என்று நமக்குத் தெரியாது. ஓர் உறவை எப்படிப் பேணுவது என்று நமக்குத் தெரியாது. நாம் நாமாக இருந்தால் இதில் எல்லாவற்றையும் முரணாகவே செய் வோம். ஓர் உறவை உடைப்போம் அல்லது தகர்ப்போம் அல்லது கொஞ்சமாவது இருக்கிற உறவை இல்லாமல் ஆக்கிவிடுவோம்—நம்முடைய வார்த்தைகளால், பேச்சுக்களால் அல்லது பேசாமல் இருப்பதால். பேசியும் உறவை முறிக்கலாம், பேசாமல் இருந்தும் உறவை முறிக்கலாம். நம் யோசனைகளால் உறவை முறிப்போம். நம் செயல்களால் அல்லது நாம் செய்யாமல் இருப்பதால் உறவுகளை உடைப்போம். "தேவனே, என் சகோதர சகோதரிகளோடு உறவுகளை எப்படி வளர்ப்பது, உறவுகளை எப்படித் தண்ணீர் ஊற்றி வளர்ப்பது என்று எனக்குக் கற்றுத் தாரும்," என்று நாம் ஜெபிக்க வேண்டும். இதை நாம் கற்றுக்கொண்டால் கணவனும் மனைவியும் உறவை எப்படி வளர்ப்பது என்று கற்றுக்கொள்வார்கள். உறவை எப்படி வளர்ப்பது என்று பெற்றோர்களும் பிள்ளைகளும் கற்றுக்கொள்வார்கள். இயேசு கிறிஸ்துவை அறியாத மக்களுடன்கூட எப்படி உறவு கொள்வது என்று நாம் கற்றுக்கொள்வோம்.

## இசைவாய்ப் பொருத்துதல்-அன்பு என்கிற கட்டு

இதைச் செய்வதற்கு என்னிடம் பெரிய யுக்தி எதுவும் இல்லை. ஆனால், ஒன்றேவொன்று சொல்ல விரும்புகிறேன். எபேசியர் 4:16 இப்படிக் கூறுகிறது: "அவயவங்கள் இசைவாய் இணைக்கப்பட்டு, பின்னிப் பிணைக்கப்பட்டு.." செங்கல் வைத்துக் கட்டும்போது ஒன்றோடொன்று இசைவாய்ப் பொருந்தும். ஆனால், கருங்கல் வைத்துக் கட்டின கட்டிடத்தைப் பார்த்திருக்கிறீர்களா? ஒரு கருங்கல் இன்னொரு கருங்கல்லோடு பொருந்துமா? பொருந்தாது. கொத்தனார் ஒரு கருங்கல்லை உடைத்து அதை இன்னொரு கருங்கல்லோடு பொருத்துவார். அப்போதுகூட அது துல்லியமாகப் பொருந்தாது. செங்கல்லை நூல் வைத்து செவ்வகம் செவ்வகமாக அறுப்பதால் அது ஒன்றோடொன்று பொருந்திவிடும். ஆனால், கருங்கல் அப்படிப் பொருந்தாது. நாமெல்லாரும் கருங்கற்கள், செங்கற்களல்ல. ஜென்மசுபாவத்தின்படி நாம் கருங்கற்கள். செயற்கையாக நாம் செங்கற்கள். ஓர் அலுவலகத்தில் பணிபுரியும்போது, ஒருவரையொருவர் சந்திக்கும்போது, "என்ன சுகமாயிருக்கிறீர்களா?" என்று கேட்பார்கள். இது செயற்கையானது. உள்ளுக்குள் அவர்களுக்கு நிறைய பிரச்சினை இருக்கலாம். ஆனால், அதை வெளியே காட்டமாட்டார்கள். அப்படியே அழகான செங்கற்களாக இருப்பார்கள். கருங்கற்கள் ஒன்றோடொன்று அவ்வளவு எளிதாகப் பொருந்தாது. அதனால் கொத்தனார் இரண்டு கருங்கற்களுக்கிடையே நிறைய சாந்து போட வேண்டியிருக்கும். செங்கல்லுக்கு அவ்வளவு சாந்து செலவாகாது. கருங்கல்லுக்கு நிறைய சாந்து செலவாகும். ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். "சமாதானக் கட்டினால்"தான் நாம் ஒரே குடும்பமாகக் கட்டியெழுப்பப்பட முடியும் என்று எபேசியர் 4:3 கூறுகிறது.

இந்தப் பூமியில் நிறைய கட்டுமானம் இருக்கிறது. வேதியியல் படிப்பவர்களுக்கு ஒன்று தெரியும். 2 ஹைடிரஜன் அணுவும் 1 ஆக்சிஜன் அணுவும் சேர்ந்து தண்ணீர் என்ற மூலக்கூறாக மாறிவிடுகின்றன. 2 ஹைடிரஜன் அணுவும் 1 ஆக்சிஜன் அணுவும் எப்படி சேர்ந்து இருக்கின்றன? ஏன் அவை பிரிந்துபோவதில்லை? அங்கு நிறைய பிணைப்பு (கட்டு) இருக்கிறது என்று சொல்கிறார்கள். 2 ஹைடிரஜன் அணுவையும் 1 ஆக்சிஜன் அணுவையும் சேர்த்து வைக்கிற ஒரு கட்டுமானம் இருப்பதால் அங்கு தண்ணீர் இருக்கிறது.

இந்தப் பிரபஞ்சத்தில் அப்படிப்பட்ட ஒரு கட்டுமானம் இருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் ஒருவரோடொருவர் இசைவாய் இணைக்கப்படுகிற ஒரு கட்டுமானம் இருக்கிறது. இது மிக அற்புதமான கட்டுமானம். அன்பு என்கிற கட்டு அல்லது சமாதானம் என்கிற கட்டு. நாம் யார் என்பது மற்றவர்களுக்குத் தெரிந்தால் யாருமே நம்முடன் இசைவாய்ப் பொருத்தப்பட முடியாது. நம்மெல்லாருக்கும் இது பொருந்தும். நாம் எப்படிப்பட்ட நபர் என்பது இன்றோ அல்லது நாளையோ அல்லது

அதற்கடுத்த நாளோ தெரிய வரும். எத்தனை நாட்களுக்குத்தான் நாம் நடித்துக் கொண்டிருக்க முடியும்? "ஹலோ பிரதர், Praise the Lord," என்று எத்தனை நாட்களுக்குத்தான் மேலெழுந்தவாரியாகப் பேசிக் கொண்டிருக்கமுடியும்? மிகவும் நடைமுறைக்குரிய விதத்தில் நாம் எப்படிப்பட்ட நபர் என்பது வெளிச்சத்துக்கு வராமல் இருக்கலாம். நாம் இரண்டுபேர் 3 நாட்களுக்குச் சேர்ந்து ஒரு வேலையைச் செய்ய வேண்டும் என்றால் என்ன வந்துவிடும்? ஒரு மின்விசிறியைப் போடுவதிலேயே நாம் எப்படிப்பட்ட ஆள் என்பது தெரியவந்துவிடும்? கொசுவும் இருக்கிறது. மின்விசிறியையும் போடுகிறோம் என்றால் முதன்முதலாக ஒருவர் போய் மின்விசிறியின்கீழ் உட்கார்ந்துவிடுகிறார். ஏன்? அவரைக் கொசு கடிக்கக்கூடாது. அங்கேயே அவர் எப்படிப்பட்ட ஆள் என்பது வெளியாகிவிடும். இது சின்ன விஷயம். இதுபோல எந்த அளவுக்கு நாம் கூடிவந்து வாழ்கிறோமோ அல்லது வேலை செய்கிறோமோ அந்த அளவுக்கு நாம் எப்படிப்பட்ட ஆள் என்று தெரிய வரும். பழைய மனிதனைப் பொறுத்தவரை, பழைய சிருஷ்டிப்பைப் பொறுத்தவரை, அங்கு விரும்பத்தக்க காரியம் எதுவுமே இல்லை. இன்னும் சொல்லப்போனால் இது வெறுக்கப்படத்தக்கது. ஆனால், அதையும் மீறி, பழைய மனிதன் நமக்குள் பூஜ்யமாகிவிட்டான். அதனால் நாம் எல்லாரும் தேவதூதர்களாகிவிட்டோம் என்பதாலா நாம் ஒருவரோடொருவர் இசைவாய்ப் பொருத்தப்படுகிறோம்? இல்லை. அன்பு என்கிற கட்டினால்தான். மூலக்கூறில் இருக்கிற அந்த கட்டுமானத்தைவிட அல்லது இந்தப் பிரபஞ்சத்தை ஒன்றாக வைத்திருக்கிற கட்டுமானத்தைவிட அன்பு என்கிற கட்டுமானம் மிக வலிமையானது. இந்த மனிதனுடைய, சகோதரனுடைய, சகோதரியினுடைய எல்லாக் குறைபாடுகளும் எனக்குத் தெரியும். என்னுடைய எல்லா குறைபாடுகளும் இந்த சகோதரனுக்குத் தெரியும். இந்த சகோதரனுக்குத் தெரிந்திருப்பதைவிட என்னிடம் இன்னும் அதிகமான குறைபாடுகள் இருக்கின்றன. என்னைப்பற்றிய சில குறைபாடுகள் மட்டும்தான் மற்றவர்களுக்கு தெரிந்திருக்கக்கூடும். உண்மை என்னவென்றால் மற்றவர்களுக்குத் தெரியாத ஏராளமான குறைபாடுகள் என்னிடம் இன்னும் இருக்கின்றன. அதற்குப் போதுமான தருணங்கள் மற்றவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஆனாலும், நாம் ஒருவரோடொருவர் இசைவாய்ப் பொருத்தப்படுகிறோம். அது மட்டும் இல்லை. பின்னிப்பிணைக்கப்படுகிறோம். இதுதான் பலமான உறவு அல்லது செழிப்பான உறவு.

**உண்மையான உறவு**

உண்மையிலேயே நாம் ஒருவரோடொருவர் உறவுகொள்வதென்றால் என்ன அர்த்தம்? தேவனுடைய பிள்ளைகளுக்கு மட்டும் இல்லை, கணவனுக்கும் மனைவிக்கும் இது பொருந்தும், பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இது பொருந்தும். நண்பர்களுக்கும் இது பொருந்தும். சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் இது பொருந்தும். இது ஒரு வழிமுறை. ஒரே நாளில் நாம் இசைவாய்ப் பொருத்தப்பட்டுவிடுவதில்லை. அல்லது ஒரே நாளில் நாம் பின்னிப்பிணைக்கப்பட்டு விடுவதில்லை.

இன்னும் சொல்லப்போனால், நாம் பக்கத்தில் இருப்பதாகத் தோன்றும்; எனினும் தூரமாகத்தான் இருப்போம். நாம் ஒருவருக்கொருவர் பக்கத்தில் வரலாம், ஆனால் தொட்டுவிடக்கூடாது. கணினியில் Hard Disc என்று ஒரு பகுதி இருக்கிறது. அதில் ஒரு காந்த மேற்பரப்பு இருக்கிறது. அதில் ஒரு தலையும் இருக்கிறது. அது Hard Discயைத் தொடாது. ஆனால், மிக அருகில் இருக்கும். அப்போதுதான் அதனால் காந்த அலைகளை உணர முடியும். காந்த அலைகளை உணரக்கூடிய அளவுக்குப் பக்கத்தில் இருக்க வேண்டும். ஆனால், தொட்டுவிடக்கூடாது. நாமும் ஏறக்குறைய அப்படித்தான் உறவுகொள்வோம். பக்கத்தில் போகலாம்; ஆனால் மிக அருகில் போய்விடக்கூடாது. மிக அருகில் போனால் சிராய்ப்புகள் விழுந்துவிடும். மிகவும் நெருக்கமாகிவிட்டால் அவரால் நமக்கு சிராய்ப்புகள், நம்மால் அவருக்கு சிராய்ப்புகளும், இரத்தக்கசிவும் உண்டாகும். இருதய உடைசல் கூட ஏற்படும். எனவே, "எதற்கு இந்த வம்பு?" என்று நினைக்கிறோம். அதனால் பாதுகாப்பான அளவுக்கு ஒரு தூரத்தைப் பராமரித்துக்கொள்கிறோம்.

**சிலுவையைப் பிரயோகித்தல்**

இது ஒரு வழிமுறை. இந்த வழிமுறையில் பரிசுத்த ஆவியானவர் உண்மையாக வேலைசெய்வார். அவர் இரண்டு முனைகளிலும் சிலுவையைப் பிரயோகிப்பார். கணவனிடம் அவர் சிலுவையைப் பிரயோகிப்பார். மனைவியிடமும் அவர் சிலுவையைப் பிரயோகிப்பார். பெற்றோரிடம் அவர் சிலுவையைப் பிரயோகிப்பார். பிள்ளைகளிடமும் அவர் சிலுவையைப் பிரயோகிப்பார். இந்த சகோதரனிடம் அவர் சிலுவையைப் பிரயோகிப்பார். அந்த சகோதரனிடமும் அவர் சிலுவையைப் பிரயோகிப்பார். எபேசியர் 2ஆம் அதிகாரத்தை நீங்கள் வாசித்துப்பார்த்தால், அவர் பிரிவினையாகிய நடுச்சுவரை எப்படி உடைத்தாரென்று உங்களுக்குத் தெரியவரும். எப்படி உடைத்தார்? சிலுவையில்

உடைத்தார். ஏன்? இரண்டு மனிதர்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு நடுவே பிரிவினை என்ற நடுச்சுவர் இருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத ஏராளமான தடைகளும், சுவர்களும், வேலிகளும் இருக்கின்றன. சொல்லப்போனால், யுத்த காலத்துத் தடைகூட அங்கு இருக்கும். "இந்த வேலியைத் தாண்டி என்னைத் தொட்டுவிடக்கூடாது. இதையெல்லாம் தொட்டுக்கொள்ளலாம். ஆனால் அதை யெல்லாம் தொடக்கூடாது," என்ற ஒரு நீண்ட பட்டியலேகூட இருக்கும். பல அடுக்குகளாலான வேலிகள் பல்வேறு உயரங்களில் இருக்கின்றன.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு யாருக்கும் சொந்தமில் லாத ஒரு நிலப்பரப்பு இருக்கிறது. இதை no man's land என்றழைக்கிறார்கள். நம்முடைய மனப்பாங்கு எப்படிப்பட்டதென்றால், "யாருக்கும் சொந்தமில்லாத இந்த No man's land வரை நீ வரலாம். அதற்கு மேல் நீ வரக்கூடாது," ஏன்? அதற்குப்பிறகு என்ன இருக்கும்? வேலி. அதைத் தொட்டுவிடக்கூடாது. தேவன் சிலுவையைப் பிரயோகிப்பார். இதுதான் நம் உறவு பலப்படுத்தப்படு வதற்கும், ஐசுவரியமாக்கப்படுவதற்கும் ஒரே வழியாகும்

## நடைமுறைக்குரிய காரியங்கள்

இப்போது நடைமுறைக்குரிய சில காரியங்களைப் பார்ப்போம். எப்படி நாம் ஓர் உறவை உருவாக்கு வது? நாம் பேசலாம் அல்லது சரீரப்பிரகாரமாக நாம் போய்ப் பார்க்கலாம். இன்றைக்கு நிறைய சாதனங்கள் இருக்கின்றன. தொலைபேசி இருக்கிறது. இ-மெயில் என்ற மின்அஞ்சல் இருக்கிறது. கைபேசியில் SMS வசதி இருக்கிறது. ஒருவன் இன்னொருவனைச் சந்திக்க விரும்புகிறான். அவர் களுடைய செல்போனில் காசு இல்லையென்றால் missed call கொடுக்கிறார்கள். இது "பேசக்கூடிய அளவுக்குக் கைபேசியில் காசு இல்லை. ஆனால், நான் உன்னுடன் பேச விரும்புகிறேன், நான் உன்னை நினைக்கிறேன்" என்பதைத் தெரிவிப்பதற்காக. உடனே மறுபக்கத்தில் இருப்பவர் புரிந்து கொள்கிறார். இது எதற்காக? கட்டியெழுப்புவதற்காக. "நான் உன்னை நினைத்துக்கொண்டிருக் கிறேன்" என்பதை உணர்த்த.

ஒருவரோடு நம் உறவை உருவாக்குவதற்கு நாம் செய்யவேண்டிய முதல் காரியம், "நான் உன்னை நினைக்கிறேன்" என்று சொல்வதுதான். திடீரென்று ஒரு சகோதரன் என் நினைவுக்கு வருகிறான். அந்த சகோதரன் இன்று வெளியூருக்குப் போவதாகச் சொல்லியிருந்தாரே! உடனே நான் என்ன செய்கிறேன். "ஆண்டவரே இந்தப் பயணத்தில் சகோதரனோடு உம் கரம்கூட இருக்கட்டும். உம் முடைய சித்தத்தை வாய்க்கப்பண்ணும். தேவையான கிருபையை நீர் தாரும். எல்லாச் சூழ்நிலை யையும் நீர் சாதகமாக்கும்," என்று நான் ஜெபிக்கிறேன். அதன்பின் நான் மறந்துவிடுகிறேன். அது பரவாயில்லை. முதலாவது நாம் நினைவுகூருகிறோம்.

அதன்பின் அவரை நினைவுகூருவதால் அவருடன் பேசுகிறோம். முடிந்தால் போய்ப் பார்க்கிறோம். அவருக்காக ஜெபிக்கிறோம். அதற்குமேல் முடிந்தால் சரீரப்பிரகாரமாக அவருக்கு உதவி செய் கிறோம் அல்லது தேவனைப்பற்றிய சில சத்தியங்களை அவருடன் பகிர்ந்துகொள்கிறோம். இவைக ளெல்லாம் என்ன? உறவுகளை நாம் கட்டியெழுப்புகிற வழிகள். ஆரம்பிப்பதற்கு தேவன் நமக்குக் கிருபை தர வேண்டும்.

சில சமயங்களில் அடுத்த முனையிலிருந்து எந்தப் பதிலும் வரவே வராது. உடனே நாம் என்ன செய்வோம்? ஒரு குறிப்பிட்ட பாணி இருக்கிறது. "மூன்றுமுறை நான் அழைப்பேன். அதற்குப்பிறகு அவர் பதில்சொல்லவில்லையென்றால் அத்தோடு முடித்துக்கொள்வேன்," என்ற மனப்பாங்கு இருக் கக்கூடாது. உண்மையிலேயே தேவன் ஒரு பாரத்தைக் கொடுப்பார் என்றால் அந்த உறவை நாம் வளர்ப்போம். மூன்றுமுறை நாம் முயற்சி எடுத்திருப்போம். அடுத்த முனையிலிருந்து எந்தப் பதிலும் இல்லை. பரவாயில்லை. தேவன் பாரப்படுத்தினால் நாம் அதை விட்டுவிடுவதில்லை. என்ன செய்ய வேண்டும்? ஒரு வாரம் கழித்து அல்லது ஒரு மாதம் கழித்து அல்லது ஒரு வருடம் கழித்து நாம் மீண்டும் முயற்சிசெய்ய வேண்டும். இதில் நாம் முறைத்துக்கொண்டு, "இதோ பார், நான் என்னா லான எல்லா முயற்சிகளையும் செய்துவிட்டேன். அவர் எந்தப் பதிலும் காட்டவில்லை. அதனால் நான் விட்டுவிடப் போகிறேன்," என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை. தேவன் நம்மேல் எடுத்த முயற்சிகளை அப்படி விட்டிருந்தாரென்றால் நம்மில் யாருமே இரட்சிப்புக்குள் வந்திருக்கவே முடியாது. ஏனென்றால், அவர் நம்மிடம் மூன்றுமுறை அல்ல, முந்நூறுமுறை பேசினார். இது நடை முறைக்குரிய ஒரு காரியம். இதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இதுதான் உண்மையான சபை வாழ்க்கை. சபை என்பது கட்டிடம் இல்லை. சபை என்பது ஒரு வாராந்தர வாடிக்கையும் இல்லை. வாராந்தர வாடிக்கை என்றால் என்ன? வாரத்துக்கு ஒரு தடவை கூடிவருவது அல்லது இது வருடாந்தர வாடிக்கையும் இல்லை. கிறிஸ்துமஸ், ஈஸ்டர், பெரிய வெள்ளிக்கிழமைபோன்ற நாட்களில் கூடிவருவது. அதுவும் இல்லை. தேவனுடைய பிள்ளைகள் ஒருவரோடொருவர் உறவுகொண்டு வாழ்வதுதான், ஒரு குடும்பமாக வாழ்வதுதான், சபை வாழ்க்கை. கூட்டங்களும் தேவைப்படலாம். ஆனால் கூட்டமே சபை வாழ்க்கையாகிவிடாது.

நாம் ஒருவரோடொருவர் இசைவாய்ப் பொருத்தப்படுவது, பின்னிப்பிணைக்கப்படுவது, நாம் ஒரு வரையொருவர் நினைவுகூருவது. புதிய ஏற்பாட்டில் **ஒருவருக்கொருவர்** என்ற வசனம் எத்தனை தடவை வருகிறது என்று பார்த்தால் 100க் கணக்கில் இருக்கும். ஒருவரையொருவர் நினைகூருவது, ஒருவருக்கொருவர் ஜெபிப்பது, ஒருவருக்கொருவர் பேசுவது, ஒருவரையொருவர் போய் பார்ப்பது, ஒருவருக்கொருவர் சில உதவிகளைச் செய்வது, தேவனுடைய வார்த்தையை ஒருவருக்கொருவர் நாம் பகிர்ந்துகொள்வது. இவைகளெல்லாம் நாம் உறவுகளைக் கட்டியெழுப்புதற்கான வழி முறைகள்.

## தேவனுடைய வேலை

இப்படி நாம் உறவு கொள்ளும்போதுதான் தேவன் நம்மூலம் வெளியாக்கப்படுகிறார். தேவனுடைய அன்பு, தேவனுடைய ஒளி, தேவனுடைய நீதி, தேவனுடைய பரிசுத்தம் ஆகியவைகளெல்லாம் நம் மூலம் வெளியாக்கப்படும். இதுதான் தேவனுடைய நோக்கம். இப்படிப்பட்ட குடும்பத்தைத்தான் தேவன் இன்று இந்தப் பூமியில் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறார். ஆமென்.